கூட்டுறவு தேர்தல் / மிக அவசரம்

ந.க.92/2013/CE-5(3) நாள். 11.03.2013

ஐயா,

பொருள்: தேர்தல் – கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் – அறிவுரைகள் வழங்குதல்- வேட்புமனு (படிவம் 18) பெற்றதற்கான ஒப்புகை- தொடர்பாக.

*****

விதிகள் 52(8)(எ)ன்படியான வேட்புமனுவிற்கான படிவம் 18–ல் தேர்தல் அலுவலரின் மேற்குறிப்பு என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது என்ற நிலையில், வேட்புமனு பெற்றதற்காகத் தனியே 'ஒப்புகை' (acknowledgement) வழங்கவேண்டுமா என்ற வினா மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் அலுவலர் கூட்டங்களில் எழுப்பப்பட்டது. அது தொடர்பாக கீழ்வரும் அறிவுரை வழங்கப்படுகிறது.

விதி 52(8)(சி)ன்படி, வேட்புமனுவினைப் பெறும் தேர்தல் அலுவலர், வேட்புமனுவினைப் பெற்ற உடன், வேட்பு மனு அவரிடம் தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் நேரத்தை வேட்பு மனு படிவத்தில் பதிவு செய்வதுடன், அதனைப் பெற்றதற்கான ஒப்புகையும் (acknowledgement) உடன் (immediately) அளித்திட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே தேர்தல் அலுவலர்கள் வேட்பு மனு பெற்றதற்கான ஒப்புகையை கண்டிப்பாக அளிக்க வேண்டும். மாதிரி ஒப்புகைச் சீட்டு இணைக்கப்பட்டுள்ளது.

இதனை தேர்தல் அலுவலர்களுக்குத் தெரிவித்து, தெரிவித்த விபரத்தை அறிக்கையாக அனுப்பிடக் கோரப்படுகிறது.

(ஒம்../-) ம.ரா. மோகன்
ஆணையர்

பெறுநர்:
மாநிலத் தேர்தல் அலுவலர்கள்.

<u>மாதிரி ஒப்புகைச்சீட்டு</u>

**(1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், விதி எண் 52(8)(சி)ன்கீழ்)**

1) சங்கத்தின் பெயர்

2) வேட்பு மனு வரிசை எண்

3) வேட்பாளரின் பெயர் மற்றும் முகவரி

4) வேட்பு மனு தாக்கல் : <u>நாள்</u> <u>நேரம்</u>

5) வேட்புமனு தாக்கல் செய்தவர்
பெயர் மற்றும் முகவரி
(வேட்பாளர்/ முன்மொழிபவர் மற்றும்
வழிமொழிபவர்)

தேர்தல் அலுவலரின் கையொப்பம்.

(ஒம்../-) XXX
ஆணையர்